Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-25

சுடர்: 2 யாழ்ப்பாண பிரபவ ஷூ ஆடி மீ 29 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 18 (14 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 223

கின் சென்ரர்
A/L 88, 89
பொருளியல் -வரதாஜன்
கணக்கியல் - மரியதாஸ்
வர்த்தகம் - ரட்ணம்
அளவையியல்- கேசவன்
தமிழ், இந்து நாகரிகம்– காரை. சுந்தரம்பிள்ளை
ஆரம்பம்:- 16.8.87
ஞாயிறு 3 மணி

கின் சென்ரர்
மானிப்பாய்.
A/L 88, 89
பொருளியல் பகுதி II
வாவு செலவுத்திட்டம்
ஆரம்பம்:- 16.8.87
ஞாயிறு 4 மணி

இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

# ஒப்பந்தம் முழு அமுலின் பின்பே இந்திய இராணுவம் திரும்பும்



புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை இந்திய வைத்திய அதிகாரி பரிசோதனையிடுவதைப் படத்தில் காணலாம்

## தமிழரின் பாதுகாப்பு சந்தேகத்துக்கு உரியதானால் ஆயுத ஒப்படைப்பு வெற்றி பெறாது

புதுடில்லி ஆகஸ்ட் 14

இலங்கை இந்திய ஒப்பந்தம் முற்றாக அமுல் செய்யப்பட்ட பின்னரே இலங்கை சென்றிருக்கும், இந்திய அமைதிப் படையினர்கள் நாடு திரும்புவார்கள்.

இவ்வாறு இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைக் கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திர வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன.

இந்திய இராணுவத்தை விரைவில் திருப்பி அனுப்புவது என்ற பேச்சு, தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்தும். அவ்வாறு சந்தேகம் ஏற்பட்டால் ஆயுத ஒப்படைப்புத் திட்டம் வெற்றி பெறமாட்டாது என்றும் இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த நிலைப்பாட்டை இந்தியா, இலங்கை அரசுக்கு விளக்கி இருப்பதாகவும் அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்திய இராணுவத்தை விரைவில் திருப்பி அனுப்புவது பற்றிய ஊகமும் பேச்சும் ஒப்பந்தத்தை அமுல்செய்வதற்கு உதவி அளிக்கமாட்டாது; சமாதான நோக்கம் பற்றிய நம்பிக்கையையும் இது ஏற்படுத்தாது;—

ஒப்பந்தத்துடன் கூடிய இணைப்பு இந்திய இராணுவத்தை வைத்திருப்பதற்கான விதிகளைக் கொண்டிருக்கின்றது—

தேவையானால் யுத்த நிறுத்தத்தை அமுல்நடத்

(4ஆம் பக்கம் பார்க்க)



பலாலி முகாமில் இருந்து விடுதலையான இளைஞர்களில் ஒருவரை இந்திய இராணுவ உயரதிகாரி ஹர்க்கித் சிங் அழைத்து அவரை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைத்த போது பிடிக்கப்பட்ட படம்

## 11 பேர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஆக. 14

வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் பத்துப்பேர் நேற்று பலாலி இராணுவ முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரும் விடுதலையாகி உள்ளார்.

இவருடன் சேர்த்து 11 இளைஞர்கள் நேற்று விடுதலையானார்கள்.

காலியில்இருந்து பலாலி முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்,

இந்திய இராணுவ அதிகாரிகள் முன் விடுதலையான 11 இளைஞர்களும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். குலசேகரம் சகல இளைஞர்களையும் வடமராட்சிப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். (இ-10)

## கூட்டுக் கடல் ரோந்து; கொழும்பில் பேச்சு

கொழும்பு, ஆக 14

இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிரிவின் தளபதி பத்மா சங்கர் கடந்த புதன் கிழமை கொழும்பில் இலங்கை கடற்படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

கூட்டுக் கடல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து இப்பேச்சுக்கள் அமைந்தன என்று கூறப்படுகின்றது (உ- )



வடமராட்சிப் பகுதியில் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் இருந்து நேற்று விடுதலையான 11 இளைஞர்களையும் படத்தில் காணலாம்.

### சுபநேரம்

14–8–1987

சுபநேரம்:–
6.05 முதல் 7 35 வரை
ராகுகாலம்:–
10.35 முதல் 12.05 வரை

## இடைக்கால நிர்வாகம்: அங்கத்துவம் குறித்து இழு பறி நிலை

புதுடில்லி, ஆக 14

தமிழ் மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்தில் அங்கம் வகிப்பவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க முடியாத இழுபறி நிலைமை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

பத்துப் பேர் கொண்ட இடைக்கால நிர்வாகத்தில் 7இடங்கள் தங்களுக்கும் ஈரோஸ் இயக்கத்துக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

ஏனைய போராளிஇயக்கங்கள் இடைக்கால நிர்வாகத்தில் தலா ஒரு ஆசனம் தங்களுக்கு வழங்கப்படவேண்டும்என்று வற்புறுத்துகின்றன.

இந்தக் கோரிக்கையை இந்திய அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் அனுதாபம்

புதுடில்லி, ஆக. 14

யாழ் கண்ணிவெடி விபத்தில உயிரிழந்த இரண்டு இந்திய வீரர்களின் குடும்பங்களுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

இரண்டு வீரர்களின் சடலங்களும் நேற்று இந்தியா போய்ச் சேர்ந்தன.

காயமடைந்தவீரர்கள் அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டனர். (இ-எ)

### யாழ்நகரில் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 14

நேற்று முன் தினம் கண்ணி வெடி விபத்தில் பலியான இரு இந்திய இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று யாழ்ப்பாணத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தபால் ரயில் சேவை

கொழும்பு, ஆக, 14

யாழ் குடாநாட்டுக்கான தபால்விநியோகம் தபால் ரயில் சேவை ஆரம்பமானவுடன் சீரடையும்.

இப்படி கொழும்பின் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

## சிறைப் பிடிக்கப்பட்டவர்களில் 3 பொலீஸார் நேற்று விடுதலை

### 9 பேரும் தொடர்ந்து புலிகளின் காவலில்

— அலுவலகச் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆக.14

ஸ்ரீலங்காவின் யுத்தக் கைதிகள் மூவர் நேற்று விடுதலைப் புலிகளினால் இந்திய இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

மார்ச் மாதம் 23 ஆம் திகதி பண்ணை பொலீஸ் விடுதி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான போது சிறைப் பிடிக்கப் பட்டவர்களில் இம்மூவரும் அடங்குவர்.

நேற்று மாலை பலாலியில் இந்திய அமைதிப் படையினரின் அலுவலகத்தில் இந்திய இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஹர்கிர்த்சிங் முன்னிலையில் இம் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

நிபந்தனை எதுவும் இன்றி இப்மூவரும் விடுவிக்கப்பட்டனர் என்றும் ஸ்ரீலங்காவின் இராணுவ முகாம்களில் இருக்கும் அப்பாவிப் பொதுமக்கள் ஆறுயிரத்துக்கும் அதிகமானோரை ஸ்ரீலங்கா அரசு காலதாமதம் இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்:

தேவேளை ஸ்ரீலங்காவின் ஏனைய யுத்தக்கைதிகளான 9 படையினரும் விடுதலைப் புலிகளின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### ஈரோஸ் இன்று ஆயுதம் ஒப்படைப்பு

சென்னை, ஆக. 14

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இன்று வெள்ளிக்கிழமை தங்கள் ஆயுதங்களை இந்திய அமைதிப் படையினரிடம் ஒப்படைப்பர்.

முன்னணியின பேச்சாளர் சென்னையில் இதனை அறிவித்தார். (இ-எ)

### அரசியல் குழு ஆராய்வு

புதுடில்லி, ஆக. 13

இந்திய மத்திய அரசின் அரசியல் விவகாரக் குழு இன்று கூடி இலங்கை விவகாரம் குறித்து ஆராய்ந்தது.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். (அ)

### முச்சந்தி முரளி



கொழும்பு ரயிலும் நாளாந்தம் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்குது எண்டு சொல்லுங்கோ ... நாடு பிரியயில்லை எண்டு காட்டத்தானே வேணும்...!

### 300 பேர் விடுவிப்பு

கொழும்பு ஆக 14

நேற்று முந்நூறு தமிழ் அரசியல் கைதிகள் பூஸா தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப் பட்டனர்-

இத்துடன் இதுவரை ஆயிரத்து முந்நூற்றி ஐம்பது தமிழ் அரசியல் கைதிகள் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர். (இ-எ)

## கொழும்பு ரயில் பளை வரை வரும்

கொழும்பு, ஆக. 14

வடபகுதி ரயில்சேவை இன்று வெள்ளிக்கிழமை முதல் பளை வரை விஸ்தரிக்கப்படுகின்றது.

காலை 5-45 மணிக்கு கொழும்பு, கோட்டையில் இருந்து புறப்படும் யாழ் தேவி, பளையை நண்பகல் 12-33 மணிக்கு வந்தடையும்.

பளையில் இருந்து பிற்பகல் 1-30 மணிக்குப் புறப்படும் யாழ் தேவி இரவு 8-48 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை அடையும். (உ )



பண்ணை பொலீஸ் விடுதித் தாக்குதலின் போது புலிகளினால் சிறைப்பிடிக்கப் பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொலீஸ் கான்ஸ்டபின்கள் மூவரையும் படத்தில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**விற்பனைக்கு**

**Bairaha Farms Hisex** பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகளும் **Hybro** புறொயிலர் குஞ்சுகள் **Hy line** வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (1469)

**அறிவித்தல்**

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறிவிட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். சகல விதமான இலங்கை, இந்திய வார மாத சஞ்சிகைகளும் புத்தகங்களும் பெறலாம். (1458)

## மோட்டார் சைக்கிள்களும் கொள்ளை

கொழும்பு, ஆக. 14

தென் இலங்கையில் துப்பாக்கிக் கொள்ளையுடன் மோட்டார் சைக்கிள் கொள்ளையும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

பாடசாலைப் பகுதிகளில்

# நாளைக்கு முன் கண்ணிவெடி அகற்றப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 14

வடமராட்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் முகாமிட்டிருந்த பாடசாலைகளைச் சுற்றி வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் 15ஆம் திகதிக்கு முன்னர் அகற்றப்படும்.

இராணுவ இணைப்பதிகாரி ஜெரி டி சில்வா வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகா பெரியதம்பியிடம் இதனைத் தெரிவித்தார்.

செல்வி திலகா பெரியதம்பி வடமராட்சி பாடசாலைகளின் நிலைமை குறித்து அண்மையில் இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார்.

அப்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. (இ-ஒ)

## சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக 14

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கு சிமெந்து வழங்க ஆரம்பித்திருக்கிறது.

இதனால் வடபகுதியின் சிமெந்துத் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும்.

பரீட்சார்த்தமாக பக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட சிமெந்து தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்டது. (உ-7)

# யாழ் மாநகர சபையின் அனுமதி இன்றிக் கட்டடங்களை கட்டவோ, திருத்தவோ வேண்டாம்

## வர்த்தகர் சங்கம் சொல்கிறது

யாழ் மாநகரசபையின் அனுமதியுடனேயே வர்த்தகர்கள் தங்கள் கட்டடங்களைக் கட்டவோ அல்லது திருத்தவோ வேண்டும்.

யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்த அறிக்கையானது மேற்கண்டவாறு தெரிவிக்கிறது.

எமது தாயகத்தைக் காப்பதற்காக எவ்வளவு பொறுப்புடனும், தியாகத்துடனும் நடந்து கொண்டோமோ அவ்வாறான பொறுப்புடனும், தியாகத்துடனும் எமது யாழ்ப்பாணப் பட்டினத்தை வடிவமைப்பதில் நாம் எல்லோரும் பங்கு பற்ற வேண்டும். எமது யாழ்ப்பாண நகரம் திட்டமிட்ட பட்டினமாக திகழ வேண்டும் என்பது தான் எல்லோரதும் நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாண மாநகர சபையின் உத்தரவு இல்லாமல் வர்த்தக நிலையங்கள் புதிதாகக் கட்டப்படுவது மன வேதனைக்குரிய தொன்றாகும்.

இச் செயல்கள், பின் விளைவுகள் வேதனையைத் தரக்கூடியவையே. எனவே வர்த்தகப் பெருமக்கள் யாழ் மாநகர சபையின் உத்தரவுடனேயே தங்கள் கட்டடங்களைக் கட்டவோ புதுப்பிக்கவோ வேண்டும் எனப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படி அறிக்கையில் கோரப் பட்டுள்ளது. (இ)

## ஒப்பந்தம் ஒருவகையில் காதல் கடிதம்!

கொழும்பு, ஆக, 14

இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஒரு காதல் கடிதமே.

ஒப்பந்தத்தில் உள்ள யோசனைகள் சட்டமாக்கப்பட்ட வுடன்தான் திருமண சர்டிபிக்கட் வழங்கப்படும்.

இப்படிச் சொன்னார் காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா.

''அதிகாரப் பரவலாக்கலும் இலங்கையில் அமைதிக்கான வழியும்'' என்றதலைப்பில பிரிட்டிஷ் கவுன்சில் பார்வையாளர் அரங்கில் அமைச்சர் உரை நிகழ்த்தினார்.

ஒப்பந்த யோசனைகள் அடங்கிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் நம்பிக்கையும் தெரிவித்தார் (உ-எ)

## சுட்டுக்கொலை!

திங்களன்று மதமக்கலை எனும் இடத்தில் பிரபல வர்த்தகர் ஒருவர் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டது.

வேறு இரண்டு வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. வீட்டில் இருந்தவர்கள் காட்டுக்குள் ஓடி உயிர் தப்பினர்.

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களின் போது பாவிப்பதற்கு தமது துவக்கை இவர் கொடுக்க மறுத்ததே இச் செயலுக்குக் காரணம் என்று தெரிகின்றது.

## பூதத்தம்பி வீடியோ திரைப்படம்

யாழ்ப்பாணம், ஆக. 14

பூதத்தம்பி வீடியோத் திரைப்படம் கஸ்தூரியார் வீதியிலிருக்கும் இந்திரா ஜுவல்லேர்ஸ் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5–00 மணிக்கும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கும் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

யாழ் மாநகர ஆணையாளரும் படத் தயாரிப்பாளருமான திரு சி. வி. கே. சிவஞானம் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ)

## ஜே. ஆருக்கு நேரு பரிசு

கொழும்பு, ஆக 14

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு, ஜவஹர்லால் நேரு பரிசு வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அமைதி, சமாதானம் ஆகியவற்றுக்காகஉழைப்போருக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. (அ)

## சடலங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக 14

கண்ணிவெடிக்குப் பலியான இந்திய இராணுவ வீரர்கள் இருவரது சடலங்களும் புதனன்றே இந்தியா கொண்டு செல்லப்பட்டன.

யாழ் ஆஸ்பத்திரியில் மரணமான இருவரது சடலங்களும் ''டிரக்'' வண்டிமூலம் கோட்டை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு சென்று—

பின்னர் சடலங்கள் விசேட விமான மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## மோதலில் ஒருவர் பலி!

பொலன்னறுவை மாவட்டத்தில் மொனரத்தென்ன காட்டில் பொலீஸாருக்கும் ஆயுதம் தரித்த கோஷ்டிக்கும் இடையே நடந்த மோதலில் ஒரு கிளர்ச்சிக்காரர் உயிரிழந்தார்.

ஒரு பொலீஸ்காரர் காயமடைந்தார்.

இறந்தவர் கல்காரிய என்னுமிடத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரிடம் இருந்து துப்பாக்கி ரவைகளைப் பொலீஸார் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# இடமாற்றம் பெறும் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஆக. 14

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் இடமாற்றம் செப்டம்பர் முதலாம் திகதி முதல் அமுலாகிறது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உடனடியாக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றிருக்கின்றனர். இவர்கள் எந்தப் பாடசாலைக்கு மாற்றம் பெறுவர் என்பது இனி மேல்தான் முடிவு செய்யப்படும்.

செல்வி ஆர். சிறிசுப்பிரமணியம் கசு/சாகிரா ம. வி. தர்காநகர்.

திரு கே குணம் க/ சாந்த அந்தோனியார் கல்லூரி, கண்டி.

திரு ரி முருகையாநு/ஹோல்புறூக் த. க. வி. அக்கரப்பத்தன.

திரு வி. சிவகுமாரன் நு / கைலண்ட் ம. வி. ஹற்றன்.

திரு பி. ஈஸ்வரநாதன் நு/ சென்யோசப் த. ம. வி. மஸ்கெலியா.

செல்வி ரி தியாகராசா கமு/அக்கரைப்பற்று மு. பி. வி அக்கரைப்பற்று – 6

திரு கே. கணேசநாதன் சமு/விபுலானந்த ம. ம. வி. காரைதீவு –கி. மா.

செல்வி எம். இராமநாதன் கமு/ முஸ்லிம் மத்திய ம. வி. சம்மாந்துறை.

செல்வி வி. சிவப்பிரகாசம் கமு/ அல்–அஷ்ரக் ம. வி நிந்தாவூர்.

செல்வி பி. துரைச்சாமி கமு/ அக்கரப்பற்று இ. கி. மி. ம. வி. அக்கரைப்பற்று.

திருமதி எஸ் சுரேந்திரன் கமு/ அக்கரைப்பற்று இ . ம. வி. அக்கரைப்பற்று.

செல்வி எஸ். செல்லத்துரை கமு/விபுலானந்த ம.வி. காரைநகர்(கி,மா)

திருமதி ஏ. சற்குணசிங்கம் பூ/பாத்திமா பாலிகா வி. புத்தளம்.

திரு. ஜே ஜே. மனுகலானந்தன் வ/புளியங்குளம் அ. த. க. வி. புளியங்குளம்.

செல்வி ஏ. பாலசரஸ்வதி மன்/சாந்தலூசியா றோ. க, த. வி. பள்ளிமுனை மன்னார்.

திரு சி. ஆர். விமலநாதன் மன்/எருக்கலம்பிட்டி ம. வி. எருக்கலம்பிட்டி.

திரு கே எஸ். சிவானந்தன் கமு/ பொத்துவில் ம வி. பொத்துவில்

செல்வி இ ஆர் எஸ். இரத்தினசிங்கம் கமு/விபுலானந்த ம. ம. வி, காரைநகர் – (கி மா)

திரு எஸ் வி மகேந்திரன் மட்/வந்தாறுமூலை ம. ம. வி. சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை

திருமதி கே. கஜநாயகவாகு மட்/காத்தான்குடி ம. ம. வி. காத்தான்குடி.

செல்வி எல். என். இராசரத்தினம் சிலா / சென்ற் டெனடிக்ற் த. க. வி. சிலாபம்.

திரு ஏ. தெய்வேந்திரன் கிளி/ கண்டாவளை அ. த. க. வி. கண்டாவளை

திரு கே. ஞானசம்பந்தன் கிளி/ பளை ம. வி. பளை

திரு எம். பிரபாகரன் கிளி/கிளிநொச்சி ம வி கிளிநொச்சி.

செல்வி ஏ. ஆறுமுகம், தி/சாந்த ஜோசப் கல்லூரி.

திரு என் கருணேஸ்வரன், தி / இந்துக் கல்லூரி, திருகோணமலை.

செல்வி ஆர். கணேசன, தி / மெதடிஸ்த பெண்கள் ஆங்கில பா., திருகோணமலை.

செல்வி கே. ராதாமணி, தி/ஸ்ரீ சண்முக வி. இ. திருகோணமலை

திருமதி எஸ் ஆனந்தசயனன், தி / சென்ற் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை.

திரு வி. சிறீஸ்கந்தராசா, தி/கிண்ணியா மத்திய ம. வி., கிண்ணியா.

திரு. கே. தில்லைநாதன், பு / சாகிரா மத்திய ம. வி., புத்தளம். (இ)


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா, ஈராக் ★

| | | | |
|---|---|---|---|
| 1. | V. K. ஜயாத்துரை | H 0377361 | புத்தூர் |
| 2. | V. S. பரமசிவம் | J 0047709 | கோண்டாவில் |
| 3. | K. குணசிலன் | H 0433269 | நல்லூர் |
| 4. | J. ராஜதுரை | H 0312207 | — |
| 5. | V. சிவகுருநாதன் | G 0329634 | காங்கேசன்துறை |
| 6. | P. குணபால | H 0312207 | ,, |
| 7. | S. சிறிஸ்காந்தராசா | H 0464394 | — |
| 8. | A. பத்மநாதன் | G 0047702 | — |
| 9. | V. வாசுதேவன் | J 0066612 | — |

மேற்குறிப்பிட்டுள்ள அனைவருக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் உடனடியாகக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்

★ **BRUNEI** (புறூனை) ★

நாட்டுக்கான வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

★ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எ[illegible]ம் உண்டு.

★ **JEDDAH** (American Company) Maintenance Cleaners

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் மட்டும் 500 R. இவர்களது பயண ஒழுங்குகள் 15.09.87 ற்கு முன் செய்து கொடுக்கப்படும்.

(B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 R.

★ **IRAQ** (HOSPITAL CLEANERS JAPAN COMPANY)

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினார். ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும் அவர்களுக்கு விசா தயாராக உள்ளது. பிரயாண ஒழுங்குகளின் திகதி பின்பு அறிவிக்கப்படும்.

★ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

★ **T. இந்திரநாதன்** ★

**M. THREE TRAVELS**
96, Kachcheri Nallur Road,
**Nallur, Jaffna.**
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


## செய்திக்கொத்து

### கோட்டைக்குள் இந்திய ராணுவம் இல்லை!

யாழ் கோட்டைக்குள் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் தங்கியிருக்கவில்லை. ஸ்ரீலங்கா ராணுவமே இன்னமும் அங்கு இருந்து வருவதாகத்தகவலொன்று தெரிவிக்கிறது

இந்திய ராணுவத்தினர் யாழ்-பொலீஸ் நிலயக் கட்டடத்திலும், பொலீஸ் நிலயவிடுதி, தொலைதொடர்பு காரியாலயம், மண்டைதீவு 'மினி' முகாம் போன்றவற்றிலேயே தங்கியுள்ளனர்.

இருநூறில் இருந்து முந்நூறுக்கு உட்பட்ட ஸ்ரீ லங்கா இராணுவம் இன்னமும் யாழ் கோட்டை முகாமில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-51)

### ஈ.பி.ஆர்.எல்.எவ். நன்றி கூறுகிறது

சென்னை, ஆக 13

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் கைது செய்யப் பட்ட பதின் மூன்று போராளிகளையும் விடுவிக்க உதவியதற்காக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் இந்திய அமைதிப் படைக்கு நன்றி தெரிவித்திருக்கின்றது.

ஒப்பந்தத்தைச் சரியாக அமுல் நடத்தி தமிழர்களை இந்தியா பாதுகாக்கும் என்று நம்புவதால் ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இப்படி இயக்கப் பேச்சாளர் எல் கே தீஸ்வரன் சென்னையில் தெரிவித்தார். (இ-எ)

### குடி தண்ணீர் விநியோகம்

குருநகர், ஆக 14

யாழ்நகரம் படிப்படியாக அமைதி நிலைக்குத் திரும்புவதை அடுத்து யாழ்- மாநகரசபை குடிதண்ணீர் விநியோகப் பகுதியால் பிரதான குழாய் திருத்தப்பட்டு குடி தண்ணீர் விநியோகமும் ஆரம்பமாகி உள்ளது. (இ-51)

### நோர்வே குழு பார்வையிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 14

நோர்வே ''தொண்டேம்'' லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் அமைத்து வரும் முத்துத்தம்பி அனாதை இல்லத்தை நோர்வே செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் பார்வையிட்டனர்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக சர்வதேச தொடர்புத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் குழுவினரை அழைத்துச் சென்று கட்டட வேலைகளைக் காண்பித்தார். (இ-ஒ)

### கிளிநொச்சிக்கு இரு ரயில்கள்?

கொழும்பு, ஆக.14

கிளிநொச்சிக்கு இரண்டு ரயில்களைச் சேவைக்கு விடுவதுபற்றி ரயில்வே திணைக்களம் ஆலோசித்து வருகிறது.

இதன்படி கொழும்பில் இருந்து காலை 5.45 மணிக்கு கிளிநொச்சிக்கு ஒருரயிலும், கிளிநொச்சியில் இருந்து காலை 9 மணிக்கு கொழும்புக்கு ஒரு ரயிலும் சேவைக்கு விடப்படலாம்.

இதனிடையில் மன்னார் கொழும்பு ரயில் சேவையையும் ஆரம்பிக்கும்படி மன்னார் அரச அதிபர் கோரிக்கை விடுத்திருக்கிறார். (இ-எ)

## இன்று நல்லூரில்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கோயில் மேற்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் சம்பூர்ண இராமாயண விரிவுரை நடைபெற்று வருகின்றது.

சிவ வை நித்தியானந்தசர்மா அவர்களால் இன்று மாலை 6–30 மணியளவில் 'பாதுகாபட்டாபிஷேகம்' என்னும்பொருள்பற்றி விரிவுரை இடம்பெறும். (இ)




## மாதர் முன்னேற்றச் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக. 14

சங்கரத்தை கிராம அபிவிருத்தி மாதர் முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற எட்டாம் திகதி நடைபெற்றது

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவி: திருமதி தங்கேஸ்வரி பரமானந்தம்

உப தலைவிகள்: திருமதி பஞ்சரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா. திருமதி நிக்கியலட்சுமி முத்துக்குமார்

செயலாளர் : செல்வி வதனி குலசிங்கம்

உபசெயலாளர்: செல்வி யோகா தம்பிஐயா

தனாதிகாரி : திருமதி புஷ்பராணி ராமச்சந்திரன்

13 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (இ-எ)

சாவகச்சேரிப் பகுதியில்

## இந்திய நிவாரணம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு இந்திய நிவாரணம் வழங்கும் பணி ஆரம்பமானது.

மட்டுவில், நுணாவில் கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்களுக்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக நிவாரணம் வழங்கப்பட்டது.

மக்களின் வசதியை ஒட்டி இப்பொருள்கள் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் மாதர் சங்கம், மட்டுவில் நூல்நிலையம், நுணாவில் கணேச வித்தியாசாலை, அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகிய ஐந்து இடங்களில் வழங்கப்பட்டன.

கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளும் கிராமசேவையாளர்களும் இதை முன்னின்று விநியோகித்தனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் விஜயம் செய்து விநியோகத்தைப் பார்வையிட்டனர். (இ-13)

# ஒருவார காலத்தில் துப்பாக்கிகள் திரும்பப் பெறப்பட்டுவிடும்

கொழும்பு, ஆக 14

ஊர்காவல் படையினரிடம் இருந்து துப்பாக்கிகளைத் திரும்பப் பெறுவது இன்னும் ஒருவாரத்தில் முடிவடையும்.

இப்படி சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிங்கள, முஸ்லிம் பகுதிகளில் உள்ள ஊர்காவல் படையினரிடம் இருந்து துப்பாக்கிகளைத் திரும்பப் பெறும் வேலைகள் தொடங்கி விட்டன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-எ)


## பயிலுநர் பத்திரிகையாளர்

இப்பதவிக்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழு விவரங்களுடன் உறவினரல்லாத இரு பிரமுகர்களின் சிபார்சுக்கடிதங்களுடன் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

சிறுவிஷயங்களில் ஆசையைத் தீர்த்துக் கொண்டு பேராசைகளை விவேகத்தைக் கொண்டு ஒழித்துக் கொள்ள வேண்டும். அறிவை இதற்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

— ராஜாஜி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22073
14.8.1987
த.பெ.இல: - 23


## ஒற்றுமை நீங்கின்...

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதோடு தமிழகத்தில் தங்கியிருந்த ஈழத் தமிழர் விடுதலை அமைப்புகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் இங்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அமைப்புகள், ஒப்பந்தப் பிரகாரம் தமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி பிரதான இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்து வருகின்றனர். ஈரோஸ் இயக்கத்தினரும் இன்று தொடக்கம் தமது ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதாக அறிவித்துள்ளனர். ஏனைய இயக்கங்களும் அவ்வாறே செய்யவுள்ளன.

அது மட்டுமன்றி, ஈழ விடுதலை இயக்கங்கள் இனிமேல் தமிழகத்திலோ அல்லது இந்தியாவிலோ இருந்து இயங்க முடியாது. ஒப்பந்தம் அப்படியும் ஒரு கட்டுப்பாட்டை விதிக்கிறது.

ஆகையால் ஆயுதப் போராட்ட இயக்கங்களைச் சேர்ந்த எல்லோரும் இங்கு திரும்ப வேண்டிய கட்டாய நிலை உருவாகி உள்ளது.

இதன் விளைவாக, கடந்த நான்கு வருடங்களாக இருந்த சூழ்நிலையை விடப் புதியதொரு சூழ்நிலை இங்கு தோன்றவிருக்கிறது.

விடுதலை இயக்கங்கள் யாவும் தமிழர் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவது என்ற பிரதான நோக்கத்தைக் கொண்டு இயங்கியவை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவை ஒரே கொடியின் கீழ், ஒரே அணியாக இயங்க முடியவில்லை. சித்தாந்த வேறுபாடுகளும், இயக்க முறைகளும் அவற்றைப் பிரித்து நின்றன.

மக்கள் உரிமைகளுக்காக— விடுதலைக்காக போராடுவதே முக்கிய நோக்கமாக இருந்த போதிலும்,பல்வேறுகாரணங்களுக்காக அவை வெவ்வேறு பாதைகளில் சென்று கொண்டிருந்தன.

அது தமிழர்கள் செய்த பெரும் துர்ப்பாக்கியம் என்றே கூறவேண்டும். தமிழர் மத்தியில் சாதாரண விடயங்களில் காணப்படும் ஒற்றுமையின்மை, மிக மகிமைமிக்க விடுதலைப் போராட்டத்தையும் கவ்விக் கொண்டது கவலைக் குரியது. ஒற்றுமையின்மை என்ற சாபக்கேடு, தமிழர் வாழ்க்கையிலும் அரசியலிலும் பல பாதகமான விளைவுகளை ஏற்கனவே ஏற்படுத்தியது தெரிந்திருந்தும், விடுதலைப் போராட்ட இயக்கங்களும் அதற்குப் பலியானது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். விடுதலை இயக்கங்கள் தனித்தனித்து இயங்கினாலும், சுதந்திரத்தை மீட்டெடுத்தல் என்ற பொதுவான கோட்பாட்டின் கீழாவது, ஒரு குடை ஸ்தாபனமாகவேனும் இயங்கி இருக்கலாம். அதுவும் சாத்தியமாகவில்லை.

அத்தகைய ஒற்றுமையீனத்தால், விடுதலைப் போராட்டத்தில் பல பின்னடைவுகளும், குறைபாடுகளும் உண்டாக்கியதை மறப்பதற்கில்லை. அந்த ஒற்றுமை இல்லாத அம்சத்தைப் பயன்படுத்தி அரசாங்கமும், மற்றும் சக்திகளும் தமிழர் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப் படுத்தியதையும் இலகுவில் மறந்துவிட முடியாது. விடுதலை அமைப்புகள் ஒன்றை மற்றொன்று அழிக்கும் முயற்சிகளில் ஈடுபடத் தூண்டப்பட்டதற்கும் ஒற்றுமை இன்மையே முழுமுதற் காரணமாகும்.

நடந்தவை நடந்து விட்டன. இனி நடப்பவைகள் ஆவது நல்லவையாக இருக்க வேண்டும். எதிர்கால நிகழ்வுகள் நல்லவையாக இருக்கக் கடந்த காலத் தவறுகள் ஒரு படிப்பினையாக அமைய வேண்டும்.

ஆயுதங்களை ஒப்படைத்தால் தமக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்று போராளிகள் கருதுகிறார்கள். ஒவ்வொரு இயக்கத்தினரும் மற்ற இயக்கங்கள் மூலம் தமது பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுமோ என அஞ்சுகிறார்கள். இத்தகைய ஒரு அபிப்பிராயம் இந்திய வட்டாரங்களால் கற்பிக்கப் படுகிறது.

அது உண்மையாக இருக்கக் கூடாது என்பதே மக்கள் விருப்பமாகும். ஆயுதங்கள் பறிபோன நிலையிலாவது விடுதலை அமைப்புகள் போட்டியும், பேதமும் காட்டாமல் பழைய கசப்பு உணர்வுகளையும், காழ்ப்புணர்வுகளையும் மறந்து ஒற்றுமையாக இயங்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒப்பந்தத்தின் மூலம் பூரண விடுதலை கிடைத்துவிடும் என்று கருத இடமில்லை. ஆகவே இனியாவது விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட்டு இயங்க வேண்டும் தங்களுக்குள் சச்சரவுபட்டு, பிளவுபட்டு, பேதப்பட்டு நிற்பது ஆகாது ஒன்றுபட்டு நின்றால் தான் சுதந்திரம் என்ற இலக்கை பல வருடங்களின் பின்னராவது அடைய முடியும்.

இயக்கங்கள் சின்னவையோ, பெரியவையோ, அவை எவையாக இருப்பினும் மகாகவி பாரதியாரின் பின்வரும் இரண்டு வரிகளையும் ஒருபோதும் மறந்து விடாதிருக்க விநயத்துடன் வேண்டுகிறோம்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே —நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.''

## காலிஸ்தான் கோரி சீக்கிய தீவிரவாதிகள் கையெழுத்திடாது அறிக்கை

அமிர்தசரஸ், ஆக. 13

இந்திய நாட்டினுள் 'சீக்கியர்களுக்கு ஒரு தாயகம்' என்ற யோசனையை சீக்கியத் தீவிரவாதிகள் நிராகரித்து விட்டனர். ''காலிஸ்தான்'' என்ற சுதந்திர நாடு ஒன்றைத் தவிர வேறு எதுவும் எமக்கு வேண்டாம்.

இப்படிச் சீக்கியத் தீவிரவாதக் குழு கையெழுத்திடாமல் வெளியிட்ட அறிக்கை மூலம் தெரிவித்து உள்ளது

இந்திய அரசமைப்பினுள் 'சீக்கியர்களுக்கு ஒரு தாயகம்' என்ற யோசனை சீக்கிய மதகுரு தர்ஷன் சிங்கினால் கூட்டப்பட்ட மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இதை நிராகரித்ததன் மூலம் சீக்கிய மதகுருவுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தனிநாட்டுக் கோரிக்கையைப் பலவீனப்படுத்தும் யோசனையே இது என்று தீவிரவாதிகள் குழு அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளது.

''சீக்கியர்களின் சரித்திரத்தைத் திரித்துக் கூற மதகுரு முற்பட்டுள்ளார்''— என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

### அகதிகள் எண்ணிக்கை 1,34,000

புதுடில்லி, ஆக. 13

1983 ஜூலையில் இருந்து 1987 ஆகஸ்ட் முற்பகுதி வரை இலங்கையில் இருந்து தமிழ்நாடு வந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 34 ஆயிரம் ஆகும்.

இத் தகவலை இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று லோக்சபாவில் தெரிவித்தார்.

அகதிகளின் பராமரிப்புக்காக தற்போதைய நிதி ஆண்டில் இதுவரை 11 கோடி 51 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

# பிஜியில் வன்செயல்கள் வெடிக்கும்!

## பவித்திரா எச்சரிக்கை

சுவா, ஆக 13

பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தல்கள் தொடர்ந்தால் பிஜியில் வன்செயல்கள் வெடிக்கும்.

பதவி கவிழ்க்கப்பட்ட பிஜிப் பிரதமர் டாக்டர் பவித்திரா முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

இந்திய சார்பு அரசு ஒன்றை டாக்டர் பவித்திரா முன்னர் அமைத்திருந்தார்.

பிஜி இராணுவக் கேர்ணல் ரபுக்கா இந்த அரசை இராணுவ சதி மூலம் கடந்த ஏப்ரலில் கவிழ்த்தார்.

அதைத் தொடர்ந்து பிஜி பாதுகாப்புப் படையினர் இந்திய வம்சாவழியினர் மீது துன்புறுத்தல்களை நடத்தத் தொடங்கினர்.

இதன் உச்சக் கட்டமாக டாக்டர் பவித்திராவின் எச்சரிக்கை வந்து உள்ளது.

''பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தல்கள் அங்கு ஒன்று இங்கு ஒன்று ஆக இருந்தபடியால் நான் முன்னர் இதுபற்றி பகிரங்கமாகக் கருத்து வெளியிடவில்லை.

''இப்போது நிலைமை மாறிவிட்டது. பகிரங்கமாக பாதுகாப்புப்படையினர் துன்புறுத்தலில் இறங்கிவிட்டனர், இது நீடித்தால் வன்செயல்கள் பெரிய அளவில் பிஜியில் வெடிக்கும். சட்டத்தை மதித்துப் பாதுகாப்புப் படையினர் நடந்துகொள்ள வேண்டும்.

இப்படி டாக்டர் பவித்திரா தனது எச்சரிக்கையில் கூறியிருக்கின்றார். (இ-எ)

### வன்செயலில் தொழிலாளி பலி!

கேப்டவுன், ஆக 13

தென் ஆபிரிக்காவின் தங்க, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக ஏற்பட்ட வன்செயலில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார்.

சுமார் 3 லட்சம் தொழிலாளர்கள் கூடுதல் சம்பளம் கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

46 தங்க நிலக்கரிச் சுரங்கங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-எ)

### ஈரான் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஆக. 13

வளைகுடாவில் கடல் கண்ணி வெடிகளை அமெரிக்கா தான் போட்டுள்ளது என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. (இஎ)

## வெளி உலகில்

### ஈரான் மீது ஆயுதத் தடை

வாஷிங்டன், ஆக. 13

வளைகுடாவில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தைப் புறக்கணித்ததற்காக ஈரான் மீது ஆயுத இறக்குமதித்தடை விதிக்க வேண்டும்.

இப்படி அமெரிக்கா, ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளது. (இ-எ)

### லோக்சபாவில் ஒப்பந்த விடயம்

புதுடில்லி, ஆக 13

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய சிறப்பு விவாதம் லோக்சபாவில் நடந்து முடிந்தது.

காங்கிரஸ் (எஸ்) எம் பி. திரு. கே. பி உன்னி கிருஷ்ணன் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்திரா காங்கிரஸ் எம் பி. க்களும் மற்றும் பலரும் ஒப்பந்தத்தை வரவேற்றுப் பேசினர்கள்.

# புத்திசாலித்தனமான எதிர்ப்பு எனது கட்சிக்குள் இருக்காது

## ஒப்பந்த விடயம் குறித்து ஜே ஆரின் நம்பிக்கை

லண்டன் டைம்ஸ், நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அண்மையில் அளித்த பேட்டியின் முதல் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி:- ஒப்பந்த விவகாரத்துக்குநாடாளுமன்ற அங்கீகாரம் இடைக்கும் வாயுப்பு எப்படி?

ஜே. ஆர்: கஷ்டம் எதையும் நான் காணவில்லை. செப்டம்பர் இறுதியில் அல்லது அக்டோபர்முன் பகுதியில் நாடாளுமன்றத்தில் சட்ட மூலம் கொண்டுவரப் படும்; நிறைவேற்றப்படும்.

கேள்வி: தனிநாடு அமைப்பதன் முதல் படி இது என்று சிங்களவர் பயப்படுகின்றனர்.

ஜே. ஆர்: அரசமைப்புச்சட்டப்படிஅது இடம் பெறாது; வன்செயல் மூலம் அவர்கள் அதனை அடையலாம்.

கேள்வி: சரித்திர ரீதியில் நாட்டின் முதல் பிரிவினை இது தானே?

ஜே. ஆர்: இல்லை. இது பற்றி முன்னர் ஆலோசனை கூறப்பட்டது. முன்னரும் இப்படி இருந்தது. எப்போதும் ஒன்பது மாகாணங்களை நாம் கொண்டிருக்கவில்லை. ஒரு முறை 5 மாகாணங்களாக நாடு இருந்தது. ஒருகட்டத்தில் நாட்டில் 3 மாகாணங்களும் இருந்தன. ஆகவே மாகாணப் பிரிவினை நாட்டின் சாத்திரத்தில் ஒரு பகுதி தான்.

கேள்வி: தேர்தல்கள் முடியும் வரை இடைக்கால நிர்வாகம் எப்படி அமையும்?

ஜே ஆர்: அடுத்த சில தினங்களில் இது பற்றி அறிவிக்கப்படும்.

கேள்வி: தற்போதைய அமைப்பில் இருந்து அந்த நிர்வாகம் எப்படி வேறுபடும்?

ஜே. ஆர்: அரசை எதிர்ப்பவர்களுடன் நாம் இணைந்துநிர்வகிப்போம். தேர்தல் முடியும் வரை அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள அவர்கள் முன்வரவேண்டும்.

கேள்வி: தமிழர் தரப்பைக் கருத்தில் வைத்துக் கூறுகின்றீர்களா?

ஜே. ஆர். : ஆம். அவர்களும் கூட.

கேள்வி : தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்?

ஜே. ஆர். : அவர்களும் தான்.

கேள்வி : வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்த்து பிரசாரம் செய்யப் போவது ஏன்?

ஜே. ஆர். : கிழக்கு மாகாண மக்கள் இணைப்புக்கு ஆதரவளித்தால் ஒழிய, நான் இணைப்பை ஆதரிக்கவில்லை.

கேள்வி : உங்களுடைய தனிப்பட்டஎதிர்ப்புக்கு என்ன காரணம்?

ஜே ஆர். : குறிப்பான காரணம் எதுவுமில்லை. சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைப்பை விரும்பவில்லை என்று நினைக்கின்றேன். இணைப்பினால் அடையப்போகும் பலன் குறித்து நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் சிங்களவர் சந்தேகம்தெரிவிக்கின்றனர்.

கேள்வி : கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறை தொகுதி நீக்கப்பட்டுள்ளதா?

ஜே. ஆர். : இல்லை. கிழக்கு மாகாணம் தற்போது போன்றே இருக்கும். அது பற்றி நான் மகிழ்ச்சிஅடைகின்றேன்.

கேள்வி : உங்கள் அமைச்சரவையின் பிரதமரும் வேறு சில அமைச்சர்களும் ஒப்பந்தம் குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளனரே !

ஜே ஆர். : ஜப்பனில் வைத்து பிரதம பேசியதை நான் வாசித்துப் பார்த்தேன். அப்போது அவர் யோசனைகளை படித்திருக்கவில்லை. ஒப்பந்தம் அப்போது கைச்சாத்திடப்படவில்லை.

''எந்தத் தீர்வும் அரசமைப்புக் குட்பட்டதாக இருக்கவேண்டும் ஒற்றையாட்சி முறையைக் குழப்பக்கூடாது பயங்கரவாதம் கைவிடப்பட வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வுகாண பயங்கரவாதிகளுடன் பேசவேண்டும்; இந்திய அரசுடன் அல்ல'' — இதுதான் பிரதமரின் நிலை.

இவற்றை எல்லாம் நிறைவேற்றிஉள்ளோம்

கேள்வி : உங்களுடைய கட்சியில் இருந்து பெரிய எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லையா?

ஜே ஆர். : புத்திசாலித்தனமான எதிர்ப்பை நான் எதிர்பார்க்கவில்லை. எனது அமைச்சரவை, நாடாளுமன்றக்குழு ஆதரவு தரும் என்று நம்புகின்றேன். ★

(வளரும்)

## சமய சந்திகளில்

### மயிலணியில் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஆக 14

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் (25-8-87) செவ்வாய்க்கிழமைகாலை 9.00 மணிக்கு ரதோற்சவமும் (26-8-87) புதன் கிழமை காலை 10.00 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நிகழவுள்ளன. (அ)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

# தமிழமுது உண்டு திளைத்த முருகன்

### திருமதி ஈஸ்வரி ஆறுமுகம்

நினைத்தொறும் காண்டொறும் பேசும்தோறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்த தேன் சொரிவது நல்லூர்க் கந்தசுவாமிப் பெருமான் திருவிழா.

முருகன் தமிழ் தந்த தெய்வம். முருகக் கடவுளுக்கும் தமிழுக்கும் உள்ள இணைபிரியாத நிலை வேறு யாருக்கும் எதற்கும் இல்லையெனத் துணிவுபடக் கூறலாம்.

'தமிழ்க் கடவுள்' கடவுள் செந்தமிழ் நூலோன் செந்தமிழ் தமிழுக்கு நல்ல தண்டமிழ் முருகன் என்று பலவாறு அழைப்போம். எம்பிரான் தமிழ்க் கடவுள் தமிழ்ப் புலவர், தமிழ் விநோதர் தமிழ்க் குரு, தமிழ்ப் பிரியர், தமிழ்ப்பித்தர், தமிழில் மருந்து உண்பார் என்பதனைப் பல சான்றுகளால் அறிகின்றோம்.

அருணகிரிநாதர் தன் திருப்புகழிலே தமிழ்ப் புலவர் என்பதற்கு சான்றுகள் அருமையாகக் கூறுகின்றார்.

செஞ்சொல் தெரி
புலவோனே
மதித்த முத்தமிழ் புல
வோனே பெரியோனே
தமிழ் தனைக் கரை
காட்டிய திறலோனே
இருத்த முத்தமிழ்
கவி கொடுத்த...

இப்படியாக அருணகிரியார் தனதுபதினாறாயிரம் திருப்புகழிலே தமிழுக்கும் முருகனுக்கும் இருந்த தொடர்பை எடுத்துச் சொரிகின்றார். முருகக் கடவுள் சேய். குழந்தைக் குமரன்.

குழந்தை வடிவேலன் அல்லவா அவன். இந்தக் குழந்தை வளர்வதற்கு வேண்டிய உணவு தமிழே குழந்தைக்கு முதன் முதல் கொடுப்பதுதேன். பின்னர் வளர்வதற்கு வேண்டியது பாலமுது இந்தக் குழந்தை முருகன் வளர்வதற்கு தேன் எது? பால் அமுது எது? மார்க்க சகாய தேவர் அருளிய திருவிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் அம்மை முலையுண்டு விளையாடும் இளையோன் நக்கீரன் சொன்ன திருமுருகாற்றுப் படைத் தேறலும் அருணகிரி நாதர் ஓது பதினாறாயிரம் திருப்புகழ் அமுதுமே. உணடான. திருமுருகாற்றுப்படை என்னும் தேன் முதலில் குழந்தைக் குமரனைக் காக்கும். பின்னர் திருப்புகழ் அமுதம் அக்குழந்தையைக் காக்கும். இங்ஙனம் முருகக் கடவுளைப் போலத் தமிழில் ஈடுபட்டார் ஒருவரில்லை. அவரைப் போலத் தமிழில் மனங் கரைந்தார் ஒருவரில்லை. தனது தமிழ்க் காதலைப் பலவாறு பெற்று இருக்கின்றார். தமிழ்ப் பாடல் பாடித் தமிழைப் பரப்புவார். தமிழ் உலகை வாழ்விப்பார். தமிழ்ப் புலவர் குழாத்துள் தலைமை வகித்து அவர்கள் அவலந் தீர்ப்பார். தமிழ்ப் புலவர்களோடு விநோத சம்பாஷணை செய்வார். வாது செய்வார், தமிழ்ப் பா பாடுவார். அடியார் கனவிலே தோன்றி பாட்டொன்று பாடக் கட்டளையிட்டு தமிழ்ப் பா பெறுவார். அந்தத்தமிழ் தெய்வத்தின் அருள் வேண்டி தமிழ்ப் பாமாலையைச் சூட்டுவோம்.

வீரவேல் தாரை வேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேடி
ருக்கை வேல் - வாரி
குளித்த வேல் கொற்ற
வேல்
சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேலுண்டே
துணை

### கடற்படைப்படகு-மீனவர்படகு மோதல்:

# இந்தியஇராணுவத்தினர் விசாரிக்க வந்தனர்

தாளையடி, ஆக. 14

ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலினால் மீனவர் படகு மோதுண்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் ஹெலிகப்டரில் தாளையடிக்கு வந்தார்கள்.

மருதங்கேணியைச் சேர்ந்த அண்ணாமலை என்பவரின் படகு கடற்படைக்கப்பலினால் கடலில் வைத்து மோதப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்க வந்த இந்திய இராணுவத்தினர், அண்ணாமலையை தம்மோடு கூட்டிச் சென்று முறைப்பாட்டினைப் பெற விருப்பம் தெரிவித்தனர்.

ஆனால் அப்போது அவர் அங்கு இல்லாததினால் பின்பு தாங்கள் வருவதாக அங்குள்ளோரிடம் கூறிவிட்டு இந்தியப் படையினர் திரும்பினர். (உ-1144)



### பொய்யாமொழி

**குறள்:**

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர்.

**பொருள்:**

அரசன் எல்லாரையும் பொது வகையாக நோக்காமல் அவரவர் சிறப்புக்கு ஏற்ற வாறு நோக்கினால், அதை விரும்பிச் சுற்றமாக வாழ்கின்றவர் பலர் ஆவர்.

# தீர்வு வந்திராவிடில் நாடு பிளவுபட்டிருக்கும்

## நீதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஆக 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு இருக்காவிட்டால் நாடு பிளவுபட்டு இருக்கும்.

இப்படி நீதி அமைச்சர் டாக்டர் நிசங்கா விஜயரத்தின தெரிவித்தார்.

இந்தியத் துருப்புக்கள் நாட்டுக்குள் வந்தமை பற்றிக் கண்டிப்பவர்கள் 1971இல் கிளர்ச்சியை அடக்க இந்திய இராணுவத்தின் உதவியைப் பெற்றதை மறந்தது ஏன்? —

இப்படி நீதி அமைச்சர் கேட்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
**SHABRA**
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

14 - 08 - 1987 வெள்ளிக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
**SHABRA**
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

## மசூர் மௌலானாவுக்கு புதிய பதவி

கொழும்பு, ஆக. 14

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான பஸ், ரயில் சேவைகளின் இணைப்பு அதிகாரியாக அல்ஹாஜ் மசூர் மௌலானாவை போக்குவரத்து அமைச்சர் முகமது நியமித்திருக்கின்றார்.

வடக்கு கிழக்கு இணைந்த மாநிலத்தில் ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகளை ஒன்றாக இணைத்து நிர்வகிப்பது என்று போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதைத் தொடர்ந்தே இணைப்பு அதிகாரி நியமனத்தை அமைச்சர் செய்தார். (இ-எ)

## போக்கு வரத்து செலவு மட்டும் ரூ. 2 லட்சம்

யாழ்ப்பாணம், ஆக. 14

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை வடபகுதியின் உணவு விநியோகத்திற்கான போக்குவரத்துக்கு மட்டும் இரண்டரை இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது.

இந்த செலவின அறிக்கையை ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கு யாழ் கிளை சமர்ப்பித்தது.

போக்குவரத்து செலவினங்களுக்கான ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை 25 ஆயிரம் ரூபாவை மட்டுமே யாழ் செஞ்சிலுவைச்சங்க கிளைக்கு வழங்கியிருக்கிறது. (உ-7)

# சிங்கராயர் விடுதலை

கொழும்பு, ஆக 14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வணபிதா ஆபரண சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

புதன்கிழமை இவர் மீதான வழக்கு எதிரித்தரப்பு சட்டத்தரணியின் தொகுப்புரைக்காக எடுக்கப்பட்டது.

அப்போது அரச சட்டத்தரணி எழுந்து, சட்டமா அதிபரின் கடிதம் ஒன்றை நீதிபதியிடம் சமர்ப்பித்தார்.

குற்றவியல் கோவையின் 194 ஆவது பிரிவின் முதலாவது உபபிரிவின் கீழ் வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று சட்டமா அதிபர் அக்கடிதத்தில் கூறியிருந்தார்

இதை ஏற்று வண சிங்கராயரை நீதிபதி விடுவித்தார்.

வண சிங்கராயர் சார்பாக சட்டத்தரணி பாலாதம்பு ஆஜரானார், (இ-எ)

## 800 துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு, ஆக 14

இரண்டு வாரங்களில் எண்ணூறுக்கு அதிகமான துப்பாக்கிகள் தென் இலங்கையில் கொள்ளையடிக்கப்பட்டும் துப்பாக்கி முனையில் பறிக்கப் பட்டும் உள்ளன

இப்படி கொழும்பில் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துப்பாக்கிக் கொள்ளைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. ஒரு வாரத்தில் மட்டும் நூறு துப்பாக்கிகளுககு மேல் கொள்ளை இடப்பட்டுள்ளன. தெற்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களில இக் கொள்ளைகள் பரவலாக இடம்பெறுகின்றன

இப்படி அந்த பொலீஸ் அதிகாரி தெரிவித்தார். (இ-எ)

# அகதிகளை அவசரப்பட்டு நோர்வே திருப்பி அனுப்பாது

கொழும்பு, ஆக. 14

நோர்வேயில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக் கோருவதற்கான காலம் இன்னும் வரவில்லை.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் நோர்வே செஞ்சிலுவைச்சங்கச் செயலாளர் நாயகம் திரு. ஒட்கிரேன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாடு செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

''இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர் இங்கு அமைதி ஏற்பட்டு உள்ளது அதனால் அகதிகளை திருப்பி அனுப்பும்படி நீங்கள் ஏன் நோர்வே அரசைக் கோரக் கூடாது? இப்படி செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

திரு. ஒட்கிரேன் :- இங்கு அமைதி ஏற்பட்டு விட்டது என்று நான் கூறினால் அது உண்மை ஆகுமா?

எந்த ஒரு பிரச்சினையையும் இப்படியான ஒப்பந்தங்கள் மூலம் தீர்க்க முடியும்.

உலகில் முப்பது பிணக்குகள் இருந்தன. அவற்றில் ஒன்று தான் தீர்க்கப்பட்டது. அது தான் இந்திய — இலங்கை ஒப்பந்தம். (இ-எ)

# கோட்டை ராணுவ முகாம் குருநகருக்கு இடம்மாறும்

யாழ்ப்பாணம், ஆக. 14

யாழ்ப்பாண பொலீஸ் நிலையக கட்டடத்தில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவம் விரைவில் குருநகர்ப் குதியில் உள்ள ஒரு கட்டடத்தில் முகாம் அமைக்கும்.

இந்த முகாம் யாழ் நகரின் பெரிய இராணுவ முகமாக மாறும்.

இந்திய இராணுவம் பொலீஸ் நிலையக் கட்டடத்தை விட்டு வெளியேறியதும் அந்த இடத்தில் யாழ் பொலீஸ் நிலையம் இயங்கத் தொடங்கும்.

இதற்கான முயற்சிகள்யாவும் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் கோட்டையை விட்டு ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறியதும் யாழ் கோட்டை சிறைக் கூடமாக மாற்றப்படும்.

வடபகுதியின் ஏனைய இடங்களிலும் பொலீஸ் நிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு

★ உதயன் நடத்தும் ★


**அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87**

- ★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரைசொகுசுபஸ் பயணம்
- ★ கொழும்பு கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் ஒருநாள் ஓய்வு
- ★ எயர் லங்கா விமானத்தில் இருவருக்கு பழநி போய் - வரும் பயணச்சீட்டு
- ★ பழநியில் உயர்தர ஹோட்டலில் தங்கும் வசதி
- ★ பழநி முருகனை 3 நாட்கள் தங்கி வணங்கும் பாக்கியம்.
- ★ கைச்செலவுக்கு 50 அமெரிக்க டொலர்கள்.
- ● 2 ஆம் 3 ஆம் பரிசுகளாக தங்க மோதிரமும், காஞ்சிபுரம் பட்டுச்சேலையும்.

**இவற்றைப் பெறப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?**

அந்த அதிர்ஷ்டசாலி நீங்களாகவே இருக்கச் செய்யவேண்டியது இவ்வளவு தான்

1. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் நாளாந்தம் பிரசுரமாகும் 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி கூப்பன்களை கத்தரித்து எடுக்க வேண்டும்.
2. கூப்பன்களில் உள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளை அதற்கு என ஒதுக்கப்பட்ட இடைவெளிகளில் எழுத வேண்டும்.
3. உங்கள் பெயர் முகவரிகளை தகுந்த இடங்களில் நிரப்பிக் கூப்பனை நல்லூர் ஆலய வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இடவேண்டும். அல்லது தபால் மூலம். 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87'' உதயன் பணிமனை, 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.




● உதயன் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இந்தப் போட்டியல் கலந்து கொள்ள முடியாது.

## பிக்குவைக் கடத்தி மஞ்சள் உடைஅணிவது பற்றிக் கேட்டனராம்

கொழும்பு, ஆக. 14

பிக்கு ஒருவரைக் கடத்திச் சென்று எப்படி மஞ்சள் அங்கியை அணிந்து கொள்வது? என்று ஒரு கோஷ்டி கேட்டறிந்து கொண்டதாம்.

கடத்தப்பட்ட பிக்கு பொலீஸில இச்சம்பவம் பற்றி முறையிட்டார்.

பதுளை பொலீஸ் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கடந்த இரண்டு வாரங்களில் 2 ஆயிரத்துக்கு அதிகமான மஞ்சள் அங்கிகள் விற்பனையாகின என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

''எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராக உள்ளோம்''—இப்படி சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

### ஒப்பந்த . .

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தவும் வழிசெய்கின்றது —

வடக்கிலும் கிழக்கிலும் வாழும சகல சமூகங்களின் பாதுகாப்புக்கும் இந்திய, இலங்கை அரசுகள் ஒத்துழைக்கவும் ஒப்பந்தம வழிசெய்கிறது —

இந்த விதிகளை ஒரு தலைப்பட்சமாக விமர்சிக்கும் பேச்சுக்கே இடமில்லை.

**பத்தாயிரம் வீரர்**

ஏறகனவே பத்தாயிரம் இந்திய வீரர்கள் ஏராளமான ஆயுத பலத்துடன் இலங்கைக்கு அனுப்பப்பட்டதனால் தான் விடுதலைப் புலிகளும் பல்வேறு தமிழ் அரசியல் ஸ்தாபனங்களும் ஒப்பந்தத்துக்குச் சாதகமாக இருநதன —

அதே சமயம் புலிகள் தலைவர் பிரபாகரன பேசியபோது ஆயுதங்களைத் தாங்கள் கையளிப்பது தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவிடம் ஒப்படைப்பதே ஆகும் என்று சொன்னார் —

**பாதிக்கும் செயல் வேண்டாம்**

எனவே தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்துச் சந்தேகம் ஏற்பட்டால் ஆயுத ஒப்படைப்புத் திட்டம் வெற்றி பெற மாட்டாது—

இதுவரை ஒப்பந்தம் நல்ல முறையில் அமுலாகி வருகின்றது என்பது இந்தியாவின் கருத்து —

எனவே இந்த ஒப்பந்தத்தைப் பாதிக்கும் செயலில் எவரும் ஈடுபடக்கூடாது என்பதே இந்தியாவின் ஆலோசனை —

இவ்வாறு இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### விடுதலையானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 14

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று விடுதலையான இளைஞர்கள் பெயர் விவரம் வருமாறு;-

இளையதம்பி ஆனந்த சொரூபன் - தொண்டைமானாறு, கந்தசாமி தர்மராசா - உடுப்பிட்டி, திருநாவுக்கரசு ஜெயக்குமார் - வல்வெட்டித்துறை, நல்லதம்பி பரமேஸ்வரன் - பருத்தித்துறை, துரைச்சாமி கைலாசநாதன் - கிரிமலை, நாகேந்திரம் பத்தர் ரவீந்திரன் வல்வெட்டித்துறை, கார்த்திகேசு மதியழகன் - பருத்தித்துறை, பெர்ணன்டோ கலைச்செல்வன் - புலோலி, சிவகுரு ஸ்ரீதரன் - புலோலி, சிங்காரம் சுந்தரபவனம் - உடுப்பிட்டி.

இவர்கள் அனைவரும் வடமராட்சிப் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட லிபரேஷன் ஒப்பரேஷன் நடவடிக்கையின்போதும் அதன் பின்னரும் கைதுசெய்யப் பட்டவர்கள்.

இவர்களுடன் விடுதலையான நல்லதம்பி நாகலிங்கம் ஆனையிறவு இராணுவ முகாமில் சரணடைந்தவராவர்.

புளொட் இயக்கத்தில் இருந்து மூதூர்ப் பகுதியில் செயற்பட்ட இவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

### சிறைப்----

(1ம் -பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் விடுதலை செய்யப்பட்டதன் பின்பே விடுதலை செய்யப்படுவார்கள் என புலிகள் தெரிவித்தனர்.

விடுதலையானபொலீஸ் கான்ஸ்டபிள்கள் விவரம் வருமாறு:-

பாலித கருணாதிலக, கட்டுக்கஸ் தோட்டை. ஓ. பி. எம். அமரசேன வெவலாவ, கே. ஜி. உபசாந்த [illegible] தெர. (இ-10)

### மத்தியஸ்தர் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஆக. 14

அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் மூன்றிற்கான பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கான முன்னோடி வகுப்புக்கள் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு, இ. சனகலிங்கத்தினால் நாளையும், நாளை மறுதினமும் நடத்தப்படவுள்ளன.

நாளை காலை 9-30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில, இல 47, கல்லூரிவீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் இந்த வகுப்புகள் நடைபெறும் என யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் காப்டன் சோமசுந்தரம் தெரிவிக்கின்றார். (உ)

### நகரமண்டபத்தில் இந்திய இராணுவமுகாம்

யாழ்ப்பாணம், ஆக. 14

இந்திய இராணுவத்தினரின் முகாம் ஒன்று திருகோணமலையில் நகர மண்டபத்தில் அமைக்கப் படவுள்ளது.

இம்முகாம் 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ் நகரில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தனியார் ஸ்தாபனங்கள் மற்றும் மினி பஸ்கள், தனியார் வாகனங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. (இ-7)

### இடைக்கால ---

(1- ம்பக்கத்தொடர்ச்சி)

அனுதாபமாக ஆராய்கின்றன என்று சென்னையில் இருந்து பி. பி சி செய்தியாளர் அறிவித்தார்.

இடைக்காலநிர்வாகம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி புதுடில்லியில் தீவிரப் பேச்சுக்கள் நடந்து வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஒலிபரப்பு நிலையத்தை கைப்பற்ற முயற்சி

கொழும்பு, ஆக. 14

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாத்தறையில் உள்ள றுகுண சேவை நிலையத்தைக் கைப்பற்றி அதன் மூலம் அரசு கவிழ்க்கப் பட்டு விட்டது என்று அறிவிக்கப்பட இருந்ததாம்.

இத்தகவலை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உதவி இயக்குநர் திரு. ஜயவீர வெளியிட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான சமயம் தென் இலங்கையில் இடம் பெற்ற வன்செயலின் போது இது இடம்பெற விருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

''11 மஞ்சள் அங்கி அணிந்தகோஷ்டி ஒன்றே இதில் ஈடுபட்டது. முக்கிய ஒலிபரப்புச் சாதனத்தை எடுத்துக் கொண்டு நான் ஓடிவிட்டேன். அதனால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது'' என்று திரு விஜயவீர மெலும் சொன்னார். (உ-எ)

### கொழும்பில் ரவைப் பெட்டிகள் மீட்பு!

கொழும்பு, ஆக 14

வெள்ளவத்தையில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டு தானியக்கித் துப்பாக்கிக்குத் தேவையான இரண்டு பெட்டி ரவைகளைப் பொலீசார் கைப்பற்றினர்.

விவேகானந்த வீதிக்கு அருகில் உள்ள வீடு ஒன்றை கடந்த செவ்வாய் முற்றுகை யிடப்பட்டது

வட பகுதியில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் பணியாற்றிய சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தனது நுகெகொட வீட்டில் ஒப்படைக்கும்படி இந்த பெட்டிகளைக் கொடுத்து அனுப்பி இருந்தாராம்.

அனுப்பிய சப்இன்ஸ்பெக்டரின் நோககம் என்ன என்பது வெள்ளவத்தைப் பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். (உ-எ)

### கூட்டம்

சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமைநடைபெறும்.

இந்த கூட்டம் நல்லூர் உற்சவகால அலுவலகம் அமைந்துள்ள மங்கையக்கரசி வித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு மாவட்ட ஆணையாளர் தலைமையில் இடம் பெறும். என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

### விடுதலையாவர்

கொழும்பு, ஆக. 14

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசர கால விதிகள் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப் பட்ட மலையகத் தமிழ் இளைஞரும் விடுவிக்கப் படுவர்.

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

**Computer Programming**
IN
BBC BASIC

By Experienced Lecturer
at 78, Kandy Road, Chundikuli.
(Top of Forest Lane)

காலம்:- 4 மாதம்

கட்டணம்:- ரூபா 1000/-
(4 தவணைகளில் கட்டலாம்)

அடுத்த Batch 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம்

✶ Individual Courses Can Be Arranged
விரும்பிய காலத்தில் செய்துமுடிக்கலாம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. வெளியிட்ட திகதி: 14-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday August, 14 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org